# "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"

*"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல் லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:23-26).*

இயேசுவின் சீஷர்கள் என்றென்றைக்கும் கடைப்பிடிப்பதற்காக இராப்போஜனத்தை ஏற்படுத்துகையில் அவர் அந்த இராப்போஜனத்தின் நினைவுச்சின்ன இயல்பை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். அவர்களுக்கு அவர் இருமுறை - அப்பத்திற்காக நன்றி செலுத்திய பின்பும் திராட்சரசத்திற்காக நன்றி செலுத்திய பின்பும் - "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று புத்திகூறினார்.

அவரது "நினைவுகூருதல்" சொற்றொடரைக் கொண்டு அவர் தமது அப்போஸ்தலர்களுக்கு, இராப்போஜனத்தின் மூன்று பிரதான பண்புகளை நினைவூட்டினார். அவர் மறைமுகமாக அது தொடர்ந்து கடைப்பிடிக்கப் படவேண்டியதை சுட்டிக்காண்பித்தார். அவர்கள் அதில் பங்கேற்றபோது - அதாவது எதிர்காலத்தில் அவர்கள் அதில் பங்கேற்ற ஒவ்வொரு முறையும் - அவர்கள் அவரை நினைவுகூர வேண்டி இருந்தது. இரண்டாவது, அவர் இராப்போஜனத்தின் கவனக்குவிப்பை அடையாளப்படுத்தினார். அது அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் இருக்க வேண்டியதாயிற்று: "*என்னை* நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (1 கொரிந்தியர் 11:24; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மூன்றாவது பண்பு பின்னோக்கிய கவனக்குவிப்பாக இருந்தது. அது பின்னோக்கிக் கண்ணோக்கும் ஒரு வழியாக இருக்க வேண்டியிருந்தது.

எபிரெயர் 10:1-3 வசனப்குதி "நினைவுகூருதல்" என்ற வார்த்தையைப் பழைய ஏற்பாட்டுப் பலிகள் குறித்துப் பயன்படுத்துகிறது. நியாயப்பிரமாணம் "வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம்" இருந்ததால், ஆண்டுதோறும் தொடர்ந்து அளிக்கப்பட்ட பலிகள் எவரொருவரையும் பூரணப்படுத்தவில்லை. "பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு

இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் *நினைவுகூருதல்* உண்டாயிருக்கிறது" (எபிரெயர் 10:1-3; என்னால் வலிறுத்தப்படுகிறது).

பழைய ஏற்பாட்டு பலிகள் நினைவூட்டுதலின் ஒரு வழிவகையை அல்லது ஒரு "நினைவூட்டுதலை" கொண்டிருந்தன. அவைகள் செலுத்தப்பட்டபோது, ஆராதிப்பவர்களின் பாவங்களை அவர்களின் நினைவுக்குக் கொண்டுவந்தன. இதேபோன்ற ஒரு உண்மை கர்த்தருடைய இராப்போஜனத்திற்கும் உண்மையாக உள்ளது. இராப்போஜனத்தில் பங்கேற்றல் என்பது கர்த்தராகிய இயேசுவை நினைவுகூரும் வேளையையும் அதற்கான ஒரு வழிவகையையும் தருகிறது.

இராப்போஜனத்தின் இந்தப் பண்பின்மீது நாம் தியானித்து, இராப்போஜனம் எவ்வாறு இயேசுவின் "நினைவுகூருதலாக" நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது என்பதை உற்றுநோக்குவோம்.

## அவர் என்ன செய்தார்

*நாம் பங்கேற்கும்போது, அவர் என்ன செய்தார் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்க, நமது மனங்கள் பின்னோக்கிச் செல்கின்றன.* இது இராப்போஜனத்தின் வரலாற்றுரீதியான பகுதியாக உள்ளது. நாம் நமது இருதயங்களில் உண்மையில் இயேசுவுக்கு என்ன நடந்தது என்பதை நினைவுகூருகிறோம். விசாரணை, சவுக்கால் அடித்தல், சிலுவைப் பயணம், சிலுவையின்மீது ஆறுமணி நேரம் வேதனை மற்றும் சிலுவையில் அறையப்படுதலைச் சுற்றி நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவற்றையும் நாம் வேதவசனங்கள் என்ற உருப்பெருக்கியின் மூலம் காணுகிறோம்.

கிறிஸ்தவமானது வரலாற்றில் - இயேசுவின் உண்மையான வாழ்வு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் - தனது வேர்களைக் கொண்டுள்ளது. வேறு எந்த மதமும் தனது இருப்பிற்கு இவ்வகையான வரலாற்று அடிப்படையை உரிமைகோர இயலாது.

## அவர் எவ்வாறு அதைச் செய்தார்

*இந்த இராப்போஜனத்தில், அவர் தாம் செய்ததை எவ்வாறு செய்தார் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்க நமது மனங்கள் பின்னோக்கிச் செல்கின்றன.* இது இராப்போஜனத்தின் தெய்வீக பகுதியாக உள்ளது. இது ஒரு மரணமாக மாத்திரமல்ல, ஆனால் தேவகுமாரனுடைய மரணமாக இருந்தது.

இயேசு எவ்வாறு மரித்தார் என்பதை நினைவுகூராமல், எவரொருவரும் அவரது மரணத்தைத் தீவிரமாக உணர்ந்து அறிய இயலாது. இயேசு "பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" என்று பேதுரு கூறினார் (1 பேதுரு 2:22, 23). நமது ஆண்டவர் சிலுவையில் அறையப்படுதலைப் பற்றிய வசனரீதியான சித்தரிப்பை நாம் கண்ணோக்குகையில், நாம் மூன்று எதிர்மறைகளையும் ஒரு

நேர்மறையையும் காணுகிறோம்: அவர் பாவம் செய்யவில்லை, அவர் பதில் வையவில்லை மற்றும் பயமுறுத்தவில்லை, ஆனால் தேவனுடைய தீர்ப்புக்குத் தம்மை ஒப்புவித்தார்.

இயேசு சிலுவையில் அறையப்படுதல் பற்றிய இப்படிப்பட்ட ஆய்வானது எப்போதுமே நம்மைப் பின்வரும் ஒரே முடிவிற்குக் கொண்டுவருகிறது: "தேவகுமாரன் மரிப்பதை நான் கவனித்துக் கொண்டு இருக்கிறேன்!" கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் நம்மை, நாம் நூற்றுக்கு அதிபதியின் மிதியடிகளில் இருக்கக் காணுகிறோம். நாம் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்திருக்கிறோம் என்பதை நாம் அறிகிறோம்; ஆனால் இரத்தக்களரியான அந்த நிகழ்வு முழுவதிலும் அவரது நடக்கையை நாம் கவனித்த பின்பு, நாம் அவரைக் கண்ணோக்கி "மெய்யாகவே இந்த மனுஷர் நீதிபரராயிருந்தார்" (லூக்கா 23:47); "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" (மத்தேயு 27:54) என்று அறிவித்தாக வேண்டும். இரத்தத்தின் சாட்சியைப் பற்றி யோவான் குறிப்பிட்டார் (1 யோவான் 5:8); இயேசு காட்சிப்படுத்திய பரலோகத்தின் பண்பாகிய அவரது நடக்கையானது இரத்தத்தின் சாட்சியத்தினுடைய ஒரு பகுதியாக உள்ளது.

## அவர் ஏன் அதைச் செய்தார்

*நாம் இராப்போஜன மேஜையைச் சுற்றி அமருகையில், இயேசு தாம் செய்ததை ஏன் செய்தார் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்க நமது மனங்கள் பின்னோக்கிச் செல்கின்றன.* இது இராப்போஜனத்தின் ஐக்கியபகுதியாக உள்ளது. நாம் நமது ஆண்டவருடன் அமர்ந்து அவர் ஏன் *நமக்காக* மரித்தார் என்பதை நினைவுகூருகிறோம்.

இயேசு, இராப்போஜனம் பற்றிய நமது விளக்கத்தில் "உங்களுக்காக" என்று இருமுறை கூறினார் (லூக்கா 22:19, 20). அவர் தமது சரீரம் "உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறது" என்றும் பாத்திரம் "உங்களுக்காகச் சிந்திப்படுகிற" (இரத்தத்தின் சின்னமாக உள்ளது) என்றும் கூறினார். அவரது பாடு நாம் அனுபவிப்பதற்குப் பதிலாக அவருக்குத் தரப்பட்டது; அது நமது சார்பானதாக இருந்தது, அவர் தாம் பாவம் செய்திருந்து அதனிமித்தம் நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுவதற்கல்ல, ஆனால் நமது பாவங்கள் பற்றி தேவனுடைய நீதியைச் சரிக்கட்டுவதற்காகவே மரித்தார். அவர் நமக்காக அடிக்கப்பட்டார், நமக்காகச் சக்கந்தம் பண்ணப்பட்டார், நமக்காக துப்பப்பட்டார், நமக்காக சிலுவையில் அறையப்பட்டார், நமக்காக வானத்திற்கும் பூமிக்கும் இடையில் தொங்கவிடப்பட்டார் மற்றும் நமக்காக தேவனால் கைவிடப்பட்டார். கடைசியாக அவர் நமக்காக மரித்தார்.

கர்த்தருடைய மரணம் நடப்பதற்கு முந்திய இரவில் இயேசு, பின்வரும் நினைவுச்சின்ன வார்த்தைகளை உரைத்தார்: "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." "நினைவுகூருதல்" என்ற வார்த்தை பரந்து விரிந்த தன்மை கொண்டுள்ளது, ஏனெனில் எல்லாக் கிறிஸ்தவர்களும் வாரத்தின் முதல்நாள் தோறும் இயேசுவின் மரணத்தை நினைவுகூருதலில் ஒன்றிணைகின்றனர் (நடபடிகள் 20:7). இவ்வார்த்தை தூரத்தையும் கொண்டுள்ளது, ஏனெனில் நமது கர்த்தரைப் பின்பற்றுபவர்கள் பின்னோக்கி - இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னோக்கி - இயேசுவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணம்

ஆகியவற்றை நோக்கிச் செல்லுகின்றனர். ''நினைவுகூருதல்'' என்பது ஐக்கியத்தைக் கொண்டுள்ளது, ஏனெனில் இந்த இராப்போஜனத்தில் கிறிஸ்தவர்கள், இயேசுவுடன் ஐக்கியவிருந்தில் பங்கேற்கின்றனர். அவர் தமது அப்போஸ்தலர்களிடம், ''இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று கூறினார் (மத்தேயு 26:29). இவ்வார்த்தை தொடர்ச்சியைக் கொண்டுள்ளது, ஏனெனில் இயேசு மீண்டும் வருமளவும், கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரமும் இந்த போஜனத்தில் பங்கேற்கின்றனர். ஒரு கருத்தில், பங்கேற்றல் என்பது அவர்களுக்கு ஜீவனைக் கொண்டு வருகிறது. இவ்வார்த்தை ஒரு பரிசுத்த தன்மையையும் கொண்டுள்ளது, ஏனெனில் கிறிஸ்தவர்கள் இந்த இராப்போஜனத்தின் மூலமாக, எல்லாக்காலத்திலும் மிகவும் பரிசுத்தமானதும் வரலாறு முழுவதிலும் மிகவும் பரிசுத்தமானதுமான இயேசுவின் மரணம் என்ற நிகழ்வை நினைவுகூருகின்றனர்.

## முடிவுரை

நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும், இந்த உலகம் புரிந்து உணர இயலாத ஒரு ஐக்கியத்தில் ஒன்றுகூடுகிறோம் - இது கிறிஸ்துவின் இராப்போஜனத்தைச் சுற்றிச் சூழ்ந்து இருக்கும் குடும்ப ஐக்கியமாக உள்ளது. அவரது இராப்போஜனத்தின் மூலமாக நாம், இயேசுவின் மீது மாத்திரமே கவனம் குவிக்கும் ஆழமான ஒருமுகப்பாட்டிற்குள் பிரவேசிப்போமாக. தேவகுமாரன் நமக்காக என்ன செய்தார், அவர் தாம் செய்ததை எவ்வாறு செய்தார் மற்றும் அவர் தாம் செய்ததை ஏன் செய்தார் என்பதை நாம் நினைவுகூருகையில், நாம் அவருடன் விசேஷித்த மற்றும் தனிச்சிறந்த ஐக்கியத்தைப் பகிர்ந்துகொள்வோமாக.

---

*"... இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் ... இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" (லூக்கா 22:19, 20).*